முழுப்பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம்,வட மாகாணம்
Provincial Department of Education. Northern Province

| 42 | T | I,II |
|---|---|---|

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) நிலையறிபரீட்சை,2021
General Certificate of Education (Ord. Level)

பரதநாட்டியம்I, II
BarathaNatiam I, II

மூன்றுமணித்தியாலம்
Three Hours

கவனிக்கவேண்டியவை

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிக.

## பகுதி 1

1. தூக்கிய திருவடியில் அருளல் தொனில் புரியும் கடவுள்
   I. பிள்ளையார் ii.முருகன் iii. சிவன் iv. பிரம்மா

2. மலைவள வாழ்க்கையை சித்தரிக்கும் தொழில்சார் நடனம்
   i. மீனவநடனம் ii. குறவன்,குறத்தி நடனம்
   iii. அரிவுவெட்டுநடனம் iv. வாள்வெட்டுநடனம்

3. சப்தம் பெரும்பாலும் அமைந்த தாளம் யாது?
   i. மிஸ்ரசாபு ii. திஸ்ரஏகம் iii. ரூபகம் iv. ஆதி

4. தனது ஆசை பூர்த்தியாகும் வரை உணவை வெறுக்குபஞ்சபாணம்
   i. நீலோற்பலம் ii. தாமரை iii. முல்லை iv. அசோகம்

5. சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும் நாட்டிய உருப்படி
   i. தில்லானா ii. ஜாவளி iii. அலாரிப்பு iv. ஜதீஸ்வரம்

6. சங்ககாலத்தில் 7,8,9 பேர் கூடி நின்றுஆடும் ஆடல் வகை
   i. துணங்கை ii. வெறியாடல் iii. குரவை iv. வேத்தியல்

7. பதினொருவகைஆடலில் பேடிக்கூத்துஆடியகடவுள்
   i. காமன் ii. திருமகள் iii. முருகன் iv. திருமாள்

8. சுகதுண்டவிநியோகத்தில் குந்தார்த்தேஎன்பதைகுறிக்கும் செயல்
   i. வாள் ii. குத்தி iii. கோடரி iv. ஈட்டி

9. பரிசுத்தமானஉணர்வுகளைமுகபாவங்களாலும் முத்திரைகளாலும் வெளிப்படுத்திகாட்டும் தர்மி
   i. லோகதர்மி ii. நாட்டியதர்மி iii. பரததர்மி iv. நாடகதர்மி



kalvi.lk

10. பாத்திரபகிப்பிராணன்களில் காணப்படும் நரம்புக்கருவி
i. வயலின் ii. கிற்றார் iii. வீணை iv. தம்புரா

11. மோகம்,தெய்வதுதி, இசையைரசித்தல் என்பவற்றை விநியோகிக்க பயன்படும் சிரோபேதம்
i. துதம் ii. அதோமுகம் iii. பராவிருத்தம் iv. பரிவாகிதம்

12. வாழைப்பூ இதனை அபிநயிக்கப் பயன்படும் முத்திரை
i. கபித்தம் ii. மயூரம் iii. முகுளம் iv. முஷ்டி

13. ஜதீஸ்வரத்தை மெருகூட்ட செய்யப்படும் அடவு
i. குத்தடவு ii. மெய்யடவு iii. தட்டுமெட்டடவு iv. கோர்வைஅடவு

14. பரதநாட்டிய உருப்படிகளில் இதயம் போன்று விளங்கும் உருப்படி எது?
i. தில்லானா ii. அஷ்டபதி iii. வர்ணம் iv. ஜதீஸ்வரம்

15. சப்ததாண்டவத்தில் நள்ளிரவு சுடலையில் ஆடிய தாண்டவம்
i. சம்காரதாண்டவம் ii. கௌரிதாண்டவம் iii. முனிதாண்டவம் iv. திரிபுரதாண்டவம்

16. நாட்டியகலாகேசரி,பத்மஸ்ரீ ஆகிய விருதுகளை பெற்றவாக்கேயகாரார்
i. தஞ்சைநால்வர் ii. வழுவூர் இராமையாப்பிள்ளை
iii. பந்தனைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை iv. கலாநிதிபொன்னையாபிள்ளை

17. ஆடல்,குனிப்பு, கூத்துஎன நடனக்கலை அழைக்கப்பட்ட வரலாற்றுக்காலம்
i. பல்லவர் காலம் ii. சங்கமருவியகாலம் iii. சோழர்காலம் iv. சங்ககாலம்

18. நீர் கற்றஅலாரிப்புஅமைந்ததாளம்
i. துருவதாளம் ii. மிஸ்ரசாபுதாளம் iii. திஸ்ரஏகதாளம் iv. திரிபுடைதாளம்

19. வாள் ஆயுதமாகவும் பூ, முடி அணிந்தும் ஆடப்படும் கூத்து
i. தென்மோடி ii. மன்னார் கூத்து iii. வடமோடி iv. மகிடிக்கூத்து

20. பரதநாட்டியத்தில் பயன்படுத்தும் சம்பிரதாய உடை
i. பாவாடைதாவணி ii. பஞசகச்சம்
iii.பிஜாமாசல்வார் iv. விசிறிமடிப்பு ஆடை

21. பாய்ச்சல் அடவுஎனஅழைக்கப்படும் அடவு
i. தாதெய்தெய்த ii. தத்தெய்தாஹா
iii. தித்தெய்ந்ததாதெய் அடவு iv. தெய்தெய்தாம் அடவு

22. ஆயிரம் நடனக்கலைஞர்கள் கலந்து கொண்டமாபெரும் நிகழ்ச்சி நடைபெற்ற ஆலயம்
i. மதுரை மீனாட்சிகோயில் ii. தஞ்சைபெருங்கோயில்
iii. திருப்பதி iv. சிதம்பரம்



kalvi.lk

23. பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களுக்கு தெலுங்கு மொழி கற்பித்த ஆசிரியர்

i. சீர்காழிநாராயணபிள்ளை
ii. குப்புசாமிகனகபாடி
iii. வெங்கடசாமிவாத்தியார்
iv. இராமலிங்கவாத்தியார்

24. இடைசுருங்கிய தோற்பறை இரு முகப்பறை என அழைக்கப்படும் கிராமிய இசைக்கருவி

i. ஹார்மோனியம் ii. உடுக்கு iii. தவில் iv. டோல்கி

25. ஏழுதாளங்களில் மூன்று அங்ககங்களையும் எடுத்துக்கொள்ளும் தாளம்

i. ஜம்பைதாளம் ii. திரிபுடைதாளம் iii. துருவதாளம் iv. மட்டியதாளம்

26. பாத்திரபிராணன்களில் துல்லியமான உச்சரிப்பை குறிக்கும் சமஸ்கிருதச் சொல்

i. ரேகா ii. வசோ iii. றேகா iv. ஜவக்

27. கோவலன் கூத்து ஆடப்படும் இடம்

i. மன்னார் ii. யாழ்ப்பாணம் iii. வவுனியா iv. முல்லைத்தீவு

28. பறவைகள் சிறகடித்துவானில் பறந்தன இதில் சிறகு என்பதனை அபிநயிக்க பயன்படுத்தும் முத்திரை

i. கம்சபக்சம் ii. கம்சாசியம் iii. ப்ரமரம் iv. மிருககீசம்

29. பரதநாட்டிம் சிறப்பாக நடைபெறபக்கவாத்தியமாக பயன்படுத்தும் தோற்கருவி

i. தவில் ii. உடுக்கு iii. மத்தளம் iv. மிருதங்கம்

30. 1ம் காலத்தின் மறுபெயர் யாது?

i. சமம் ii. விளம்பரம் iiiதுரிதம் iv. மத்திமம்

31. ரௌத்திர ரஸத்திற்குஎதிர் ரஸம்

i. சிருங்காரரஸம் ii. வீரரஸம் iii. அற்புதரஸம் iv. கருணாரஸம்

32. 101=12 இவ் எண்ணிக்கையை காட்டும் ஜாதி மற்றும் தாளம் யாது?

i. சதுஸ்ரஜாதி,மட்டியதாளம்
ii. சங்கீர்ஜாதி ஜம்பைதாளம்
iii. கண்டஜாதிமட்டியதாளம்
iv. சதுஸ்ரஜாதிஅடதாளம்

33. தகதிமிதகததகிட இதில் இடம்பெறும் இரு நடைகள் முறையே

i. சதுஸ்ரம்,கண்டம்
ii. சதுஸ்ரம்,திஸ்ரம்
iii. மிஸ்ரம்,சதுஸ்ரம்
iv. கண்டம்,சதுஸ்ரம்

34. இந்திரனுக்குரிய ஹஸ்தத்தை எடுத்துக்கொள்ளும் பிறிதொரு தேவஹஸ்தம்

i. சிவன் ii. அகனி iii. பிரம்மா iv. விஷ்னு



kalvi.lk

35. பரதகுலபாக்கியகலிகே என ஆரம்பிக்கப்படும் ஸ்லோகம்
i. நாட்டியகிரமம்
ii. அரங்கதேவஸ்துதி
iii. புஸ்பாஞ்சலி
iv. தியானஸ்லோகம்

**36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு கீறிட்ட இடத்திற்கு பொருத்தமான விடையை தெரிவு செய்து உமக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் சரியான விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளேயே புள்ளடியை இடுக.**

36. கடல் அலைகளின் செயலை…………………………… முத்திரையை பிரயோகித்து காட்டாலம்.

i. திரிபதாகம் ii. சர்ப்பசீசம் iii. பதாகம் iv. அர்த்தச்சந்திரன்

37. தஞ்சைப் பெருங்கோயிலை……………………………….. எனும் தலைமைச்சிற்பி கட்டி எழுப்பினான்
i. ராஜராஜசோழன் ii. பாண்டியன் iii. மகேந்திரவர்மன் iv. குஞ்சரமல்லன்

38. கஞ்சக்கருவிக்கு உதாரணமாக அமைவது…………………………….. ஆகும்.
i. நாதஸ்வரம் ii. தாளம் iii. தபேலா iv. உடுக்கு

39. ………………………………. இருப்பின் நிருத்திய உருப்படி என இனம் காணலாம்.
iஅபிநயம் ii. கோர்வை iii. ஜதி iv. தீர்மானம்

40. முருகனுக்குரிய ஹஸ்த்தத்தை மாறிப்பிடித்தால் ………………………………எனும் நவக்கிரக ஹஸ்தம் உருவாகும்.
i. புதன் ii. சூரியன் iii. சனீஸ்வரன் iv. ராகு.

(40 X 1= 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதிII

**முதலாம் வினாவையும் வேறு விரும்பிய நான்கு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக**

01. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

i. தாளத்தின் இரு ஓசைகளும் எவை?
ii. கண்டிகைகளாகவகுக்கப்பட்ட 2 உருப்படிகள எவை?
iii. தோடயம்,புறப்பாடு போன்ற உருப்படிகள் காணப்படும் சாஸ்திரிய நடனம் எது?
iv. அங்காரகன் என அழைக்கப்படும் நவக்கிரஹ ஹஸ்தம் எது?
v. கங்காணியார்,கணக்குப்பிள்ளை ஆகியோரை வைத்து ஆடும் கிராமியநடனம் எது?
vi. தாய் சேய் உறவைக் குறிக்கும் பாவம் எது?
vii. ததிங்கிணதொம் என்பதை நாட்டியச் சொற்கட்டில் எவ்வாறு குறிப்பிடலாம்.?
viii. தசஅவதாரத்தில் இரணியனை கொன்ற அவதாரம் எது?
ix. போர்த்தொழிலைமையமாக வைத்து ஆடும் கிராமிய நடனம் எது?
x. சந்தியாதாண்டவம் ஆடிய சபை எது?

(12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

02.
i. நீர் கற்ற ஜதீஸ்வரத்தின் இராகம்,தாளம் என்பவற்றை குறிப்பிடுக.
ii. ஜதீஸ்வரத்தின் லட்சணத்தை எழுதுக?
iii. நீர் கற்ற ஜதீஸ்வரத்தின் 3வது கோர்வையை தாள அங்கக்குறியீட்டுடன் தருக?

(2+3+7= 12புள்ளிகள்)

03. பின்வரும் ஹஸ்தங்களின் விநியோகங்களை கருத்துடன் தருக?
i. கடகாவர்த்தனம் ii. கபித்தம் iii. தாமரசூடம்

(12 புள்ளிகள்)

04. வழுவூர் இராமையாபப்பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றையும் கலைப்பணியையும் தருக?

(12 புள்ளிகள்)



kalvi.lk

05. i. இந்தியசாஸ்திரிய நடனங்கள் 3 குறிப்பிடுக

ii. சாஸ்திரிய நடனங்களில் குச்சுப்பிடி நடனத்தைப்பற்றி விரிவான விளக்கம் தருக?

(3+9=12புள்ளிகள்)

06. சிறுகுறிப்புதருக.

i. வேடுவநடனம் ii. பஞ்சபாணம் iii.சிஸ்யலக்ஷணம்

07. சங்கமருவியகால நடனக்கலை பற்றி விளக்குக?

(12 புள்ளிகள்)

08. நீர் பார்த்து இரசித்த பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் நீர் இரசித்தவற்றை விமர்சன ரீதியாக தருக?

(12 புள்ளிகள்)

Education
கல்வி
අධ්‍යාපන



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page